**தலைப்பு 196 – விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 196 - விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,756.90 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 3,148.13 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 608.77 மில்லியன் அதாவது 16.20 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,500.35 | 1,425.78 | 74.57 | 4.97 |
| மூலதனம் | 2,256.55 | 1,722.35 | 534.20 | 23.67 |
| மொத்தம் | **3,756.90** | **3,148.13** | **608.77** | **16.20** |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 19601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 20.00 | 19.47 | 0.50 | 17.85 | 75.00 | 58.18 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 7002/0000/0292/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 41.90 மில்லியனாக காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.39 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0126/000 | 0.36 |
| 6000/0000/00/0002/0175/000 | 0.02 |
| 6000/0000/00/0016/0122/000 | 6.01 |
| மொத்தம் | **6.39** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 21 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 76 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

2005 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வந்த ரூபா 14.34 மில்லியன் கட்டுநிதி மீதிகள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,400,000 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 130 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொள்வனவுத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2015 யூலை 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதனால் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போயிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட பொருட்களுக்கிடையே ரூபா 37,524,500 பெறுமதியான 36 வகையான பொருள் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பெறுகைகள் திட்டத்திலிருந்து விலகி ரூபா 1,388,164 பெறுமதியான 14 வகையான பொருள் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சு அலுவலகத்தினால் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2.00 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டத்தில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உள்ளபடியான பதவியணி 04 உத்தியோகத்தர்கள் கொண்டிருந்தது. அமைச்சின் விடயப் பரப்பின் பிரகாரம் கணக்காய்வுப் பதவியணியினர் மற்றும் பிரிவின் செயலாற்றல் போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சினால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 03 மாதங்கள் தாமதத்தின் பிரகாரம் 2016 யூன் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சிற்கு சொந்தமான ரூபா 13,152,500 தொகையான 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது பிரதமர் அலுவலகத்திற்கும் உயர் கல்வி அமைச்சு மற்றும் நெடுஞ்சாலை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன.

**(இ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

சிரேஷ்ட அமைச்சு அலுவலகத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வாகனமொன்று உட்பட உட்பட ரூபா 60,700,000 தொகையான 03 வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 உள்நாட்டுச் நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இருதரப்பு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,139,262 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே ரூபா 3,794,385 தொகையும் ரூபா 4,828,738 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 செயலாற்றல்**

---

2014 பெப்வரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 12 விதாதா நிகழ்ச்சித்திட்டங்களில் 02 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 08 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 09 விதாதா நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் போது 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், பௌதீக செயலாற்றல் 20 சதவீதம் முதல் 25 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. எஞ்சிய 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 35 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**அரசின் பெறுகை வழிகாட்டல் செயற்பாட்டிலிருந்து விலகி செயற்பட்டமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவயின் 5.3.4 (இ) வழிகாட்டலுக்கு புறம்பாக விதாதா நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக மதியுரை சேவை வழங்கும் நிறுவனத்திற்கே நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவயின் 3.4 (இ) வழிகாட்டலின் பிரகாரம் சந்திலிப்பே, சாய்ந்தமருது, நல்லூர் மற்றும் கஹவத்த விதாதா வள நிலையங்களின் நிர்மாணத்திற்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்கு கேள்வி கோரலின்றி தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 544,690 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது,

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிர்மாணிக்கப்படுகின்ற 02 விதாதா நிலையங்களின் நிர்மாணம் தாமதமடைந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் போது நிலையங்களிற்காக பெற்றுக்கொண்ட கட்டிடங்களுக்காக ரூபா 288,000 வாடகை செலுத்த நேர்ந்திருந்தது.

**3.11 முகாமைத்துவு நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த 265 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையங்களில் 65 நிலையங்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களிலும் 87 நிலையங்கள் பிரதேச செயலகங்களிலும் 113 நிலையங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கட்டிடங்களிலும் நடாத்திச் செல்லப்படுகின்றன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிக எண்ணிக்கையான நிலையங்கள் வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 14,065,833 கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 265 நிலையங்களில் 33 நிலையங்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் கடமை மேவுகை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 06 விதாதா நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நிறுவனமொன்றிற்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 13,000,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2015 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் முறையாக பின்தொடர் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 02 நிலையங்களின் நிர்மாண வேலைகள் தாமதமாகியிருந்தன.

(இ) 02 விதாதா நிலையங்களை நிர்மாணிப்பதற்கு 2014 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காரணத்தினால் எஞ்சிய பகுதியை நிர்மாணிப்பதற்கு மீண்டும் மீளாய்வாண்டின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமையால் ஆரம்ப மதிப்பீடு ரூபா 2,147,294 ஆல் மிகைத்திருந்தது,

## 3.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 3 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 3 | 26 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 742 | 666 | 76 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 234 | 306 | 08 | 80 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 3 | 16 | - | 13 |
| | மொத்தம் | **1,031** | **1,011** | **113** | **93** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிரேஷ்ட மட்டத்திலும் மூன்றாம் மட்டத்திலும் 31 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 25 மாவட்ட விதாதா உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாதிருந்தமையால் 2016 திசெம்பர் மாதம் வரையிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

(ii) இரண்டாம் மட்டத்தில் தற்காலிகமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 238 அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 134 பேர் நிரந்தரமாக்கப்படும் போது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக நியமனம் வழங்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 140 ஆக இருந்த போதிலும், 274 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மொத்த உத்தியோகத்தர்களில் மிகையொன்று காணப்படாத போதிலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து 134 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) தற்காலிக சேவையில் ஈடுபட்டிருந்த 80 காவலாளிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். அப்பதவிகளுக்காக 2016 திசெம்பர் மாதம் வரையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(iv) தற்காலிக அடிப்படையில் சேவை புரிகின்ற 16 ஊழியர்களில் 13 பேருக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வித்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

இரண்டு விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அடிப்படை கல்வி நிறுவகத்திற்கும் அமைச்சிற்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.